**முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை : திரு. J. ஜெயசுதாகர், M.Sc., L.L.M.,,**

**முதன்மை சார்பு நீதிபதி**

**2024 ஆம் வருடம் மார்ச் மாதம் 26 ஆம் நாள், செவ்வாய்கிழமை**

**இ.ம.எண்.2/2023**

**இன்**

**அ.வ.எண்.293/2023**

K. செல்லமுத்து ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. R.மீனாட்சி
2. இளமின் பொறியாளர்,
   தமிழ்நாடு மின்சார வாரியம்,
   பாப்பம்பட்டி.
3. செயற்பொறியாளர் (கிராம பகுதி),
   தமிழ்நாடு மின்சார வாரியம்,
   பழனி. .... எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

இம்மனு 11.03.2024 ஆம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.அப்துல்ஹமீது அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.K, திருமலைசாமி, திரு.V.வீரக்குமார், திரு.M.சுந்தரபாண்டியன் மற்றும் திரு.P.முத்துச்செல்வன் ஆகியோர் முன்னிலையாகியும், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.N.ராதாகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்/வாதி மனுச் சொத்தை அமைதியான முறையில் அனுபவித்தும், பிராது மாதிரி வரைபடத்தில் ABCD எனக் குறிப்பிடப்பட்டுள்ள வாகனவழி பாதையின் வழியாக வண்டி, வாகனம், ஆடு, மாடுகள் கொண்டு சென்று அனுபவித்து வருவதை எதிர்மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகளோ, அவர்களது வகை ஆட்களோ, பிராது மாதிரி வரைபடத்தில் ABCD எனக் குறிப்பிடப்பட்டுள்ள வாகனவழி பாதையில் மின் கம்பம் ஊன்றியோ அல்லது வேறுவிதமாகவோ எவ்விதத் தடையோ, இடைஞ்சலோ செய்யக்கூடாது என்று அசல் வழக்கு முடியும்வரை தற்காலிக இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்க வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39, விதிகள் 1,2,3 மற்றும் பிரிவு 151-ன்கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. <u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:</u>

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். பிராது மாதிரி வரைபடத்தில் "A,B,C,D" எனக் குறிப்பிடப் பட்டுள்ள வாகன வழிப்பாதை, மனுதாரருக்கும், 1ம் பிரதிவாதிக்கும் உரிமைப்பட்ட பொதுப்பாதை என்று விளம்புகை வழங்க கோரியும், அதன் பின்விளைவுறுபரிகாரமாக, பிராது மாதிரி வரைபடத்தில் A,B,C,D எனக் குறிப்பிடப்பட்டுள்ள வாகனவழிபாதையின் வழியாக, மனுதாரர் தனது நிலங்களுக்கு வண்டி, வாகனம், ஆடு, மாடுகள் எடுத்துச் சென்று அனுபவித்து வருவதை, 1ம் பிரதிவாதியோ, அவரது வகை ஆட்களோ, அவர் மூலம் உரிமை கொண்டாடும் வேறு நபர்களோ எவ்விதத் தடையோ, இடைஞ்சலோ செய்யக் கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளை வழங்க கோரியும், பிராது வரைபடத்தில் A,B,C,D என்ற பகுதியில் அமைந்துள்ள பொதுப் பாதையையும் சேர்த்து, 1ம் பிரதிவாதிக்கு 5 ம் பிரதிவாதி வழங்கிய பட்டா சட்டப்படி செல்லத்தக்கதல்ல (Null and void) என்று விளம்புகை வழங்க கோரியும், பிராது வரைபடத்தில் A,B,C,D என்ற பகுதியில் அமைந்துள்ள பொதுப்

பாதையை ஒட்டி சுற்றுச்சுவர் இல்லாமல் ஆபத்தான நிலையில் அமைந்துள்ள கிணற்றை 1ம் பிரதிவாதியை மூடும்படி செயல் உறுத்துக் கட்டளை வழங்க கோரியும், சர்வே எண். 128/1 மற்றும் 128/2-ல் அமைந்துள்ள பொதுப் பாதையில் 2,3 பிரதிவாதிகள் மின் கம்பங்கள் அமைத்து 1ம் பிரதிவாதியின் ஆழ்துளை கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்கக் கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளை வழங்க கோரியும் மற்றும் செலவு தொகைக்காகவும் மனுதாரர் அசல் வழக்கினைத் தாக்கல் செய்துள்ளார். வழக்குச் சொத்தும் இன்னும் வேறு சொத்துக்களும் ஆதியில் திரு. U.K. ஆறுமுகம் மூத்த மனைவி திருமதி. மனோன்மணி மற்றும் இளைய மனைவி திருமதி. சரோஜினி ஆகிய இருவருக்கும் உரிமைப்பட்டு அனுபவித்து வந்ததில், அவர்கள் இருவரும் தங்களது கணவராகிய திரு. U.K. ஆறுமுகம் அவர்களுக்கு 17.10.1988 ம் நாள் ஆவண எண். 81/1988-ன்படி பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்தும், அதன்படி வழக்குச் சொத்தையும் இன்னும் வேறு சொத்துக்களையும் திரு.U.K.ஆறுமுகம் பொது அதிகாரம் பெற்ற முகவர் என்ற முறையில் அவரது மேலாண்மையிலும், நிர்வாகத்திலும் வைத்து அனுபவித்து வந்தார். வழக்குச்சொத்தினையும் இன்னும் வேறு சொத்துக்களையும் அனுபவித்து வந்த திரு.U.K. ஆறுமுகம் மனுதாரருக்கும், பல நபர்களுக்கும் கிரைய ஆவணங்கள் ஏற்படுத்தியும், தனது மக்களாகிய திரு.சந்தானகோபாலன் மற்றும் திரு.கார்த்திகேயனுக்கு கிரைய ஆவணங்கள் எழுதிக் கொடுத்தும் சுவாதீனம் ஒப்படைத்தார். மேற்படி பொது அதிகார ஆவணத்தின்படி அனுபவித்து வந்த திரு. U.K. ஆறுமுகம். வழக்குச் சொத்தினை மனுதாரருக்கு 16.11.1988-ம் நாள் ஆவண எண் 1312/1988-ன்படி ரெட்டையம்பாடி சர்வே எண்.130/3, 134, 135/3 மற்றும் சர்வே எண். 131 உள்ள நிலங்களில் குறிப்பிட்ட நான்குமால்களுக்குள் ஏக்கர் 5-07 உள்ள நிலத்தையும், மேற்படி நிலங்களுக்கு செல்வதற்கு சர்வே எண். 128/1 மற்றும் 128/2-ல் வடகோடியில் கிழமேலாகவும், அதனைத் தொடர்ந்து தென்வடலாகவும் ஆட்கள், கால்நடைகள், வண்டிகள், லாரிகள் போய் வரும் உரிமைகளையும் சேர்த்து கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்தும், சுவாதீனம் ஒப்படைத்தார். அதுமுதற்கொண்டு வழக்குச்

சொத்தினை மனுதாரர் சுவாதீனம் அடைந்தும், சர்வே எண். 128/1 மற்றும் 128/2-ல் வடகோடியில் கிழமேலாகவும், அதனைத் தொடர்ந்து தென்வடலாகவும் உள்ள பாதையின் வழியாக வண்டி, வாகனங்கள் எடுத்துச் சென்றும் அனுபவித்து வருகிறார். மனுதாரரின் கிரைய ஆவணத்திற்கு பின்பு, பொது அதிகாரம் பெற்ற முகவராகிய திரு.U.K. ஆறுமுகம். 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதிக்கு 15.11.1999-ம் நாள் ஆவண எண். 1958/1989-ன்படி ரெட்டையம்பாடி சர்வே எண். 128/1-ல் ஏக்கர் 3-74 உள்ள நிலத்தையும், சர்வே எண். 133-ல் உள்ள இரண்டு கிணறு மோட்டார் பம்புசெட்டில் பொதுவில் 1/3 பாகத்தையும், சர்வே எண். 128/1 மற்றும் 128/2-ல் வடகோடியில் கிழமேலாகவும், அதனைத் தொடர்ந்து தென்வடலாகவும் சர்வே எண்.132/1 மற்றும் 132/2 நிலத்திற்கு செல்லும் பாதை உரிமையையும் சேர்த்து 1ம் பிரதிவாதிக்கு கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்து உள்ளார். மனுதாரருக்கு சர்வே எண். 128/1-ல் எழுதிக் கொடுத்த 271 மீட்டர் நீளம், 6 மீட்டர் அகலம் மொத்தம் 1626 சதுர மீட்டர் உள்ள பாதையின் இடத்தை கழிக்காமல், சர்வே எண். 128/1-ன் மொத்த பரப்பளவான ஏக்கர் 3.74 உள்ள முழுச் சொத்தையும் குறிப்பிட்டு 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதிக்கு திரு. U.K. ஆறுமுகம் கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளதால், மேற்படி கிரைய ஆவணம் சட்டப்படி இல்லாநிலையது (Null and void) ஆகும். மேற்படி கிரைய ஆவணம் சர்வே எண். 128/1-ல் உள்ள மனுதாரரின் பாதை உரிமையை ஒருபோதும் கட்டுப்படுத்தாது. மேற்படி பொது அதிகாரம் பெற்ற முகவராகிய திரு.U.K.ஆறுமுகம், திருமதி. குமராத்தாளுக்கு 16.11.1988- நாள் ஆவண எண். 1313/1988-ன் படி ரெட்டையம்பாடி சர்வே எண். 128/2-ல் ஏக்கர் 3.74 உள்ள நிலத்தையும், அதற்கு சர்வே எண். 128/1 மற்றும் 128/2-ல் வடகோடியில் கிழமேலாகவும், அதனைத் தொடர்ந்து தென்வடலாக செல்லும் பாதை உரிமையையும் சேர்த்து கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்து உள்ளார். மேற்படி பொது அதிகாரம் பெற்ற முகவராகிய திரு.U.K. ஆறுமுகத்திடம் கிரையம் பெற்றுள்ள அவரது மகனாகிய திரு. சந்தானகோபால், தான் அனுபவித்து வந்த சொத்தை திரு. குப்பண கவுண்டருக்கு 16.11.1988-ம் நாள் ஆவண எண். 1314/1988-ன் படி ரெட்டையம்பாடி சர்வே

எண்.133-ல் ஏக்கர் 4.52 உள்ள நிலத்தையும், அதற்கு சர்வே எண். 128/1 மற்றும் 128/2-ல் வடகோடியில் கிழமேலாகவும், அதனைத் தொடர்ந்து தென்வடலாக செல்லும் பாதை உரிமையையும் சேர்த்து கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்து உள்ளார். மேற்படி பொது அதிகாரம் பெற்ற முகவராகிய திரு.U.K. ஆறுமுகத்திடம் கிரையம் பெற்றுள்ள அவரது மகனாகிய திரு.கார்த்திகேயன், தான் அனுபவித்து வந்த சொத்தை திருமதி. மாராத்தாளுக்கு 21.11.1988-ம் நாள் ஆவண எண். 1355/1988 ன் படி ரெட்டையம்பாடி சர்வே எண்.132/1, 132/2 மற்றும் சர்வே எண். 167/5-ல் குறிப்பிட்ட நான்குமால்களுக்குள் ஏக்கர் 3.58 உள்ள நிலத்தையும், அதற்கு சர்வே எண். 128/1 மற்றும் 128/2-ல் வடகோடியில் கிழமேலாகவும், அதனைத் தொடர்ந்து தென்வடலாக செல்லும் பாதை உரிமையையும் சேர்த்து கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்து உள்ளார். மனுதாரரும், திருமதி. குமராத்தாள், திரு.குப்பண கவுண்டர் மற்றும் திருமதி.மாராத்தாள் ஆகியோர் கிரையம் பெற்றுள்ள கிரைய ஆவணங்கள் அனைத்திலும், சர்வே எண். 128/1 மற்றும் 128/2-ல் வடகோடியில் கிழமேலாகவும், அதனைத் தொடர்ந்து தென்வடலாக செல்லும் பாதை பொதுப்பாதை என்றும், அதனை சுற்றியுள்ள உரிமையாளர்களுக்கு பொதுவாக உரிமைப்பட்டது என்றும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பொதுப் பாதையில் உரிமை பெற்ற நபர்களான மனுதாரரும், திரு. குப்பண கவுண்டர், திருமதி. மாராத்தாள் மற்றும் திருமதி. குமராத்தாள் ஆகியோர் தாவாப் பொதுப் பாதையின் வழியாக தங்களது நிலங்களுக்கு ஆட்கள், கால்நடைகள், வண்டி வாகனங்கள் எடுத்துச் சென்று அனுபவித்து வருகிறார்கள். மேற்படி தாவாப் பாதையில் 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதிக்கு எவ்வித தனிப்பட்ட உரிமையும் கிடையாது. இந்நிலையில், 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி பொதுப் பாதையில் கிணறு வெட்டியும், அதற்கு சுமார் 30 அடி தூரத்தில் உள்ள ஆற்றில் இருந்து பைப் லைன் மூலம் தண்ணீர் எடுத்து கிணற்றிற்கு கொண்டு சென்றும் விவசாயம் செய்து வந்தார். 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி பொதுப் பாதையில் அமைத்துள்ள கிணற்றிற்கு சுற்றுச் சுவர் எதுவும் கட்டப்படவில்லை. 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி பொதுப் பாதையில்

கிணறு, பொதுப் பாதையில் எவ்வித தடுப்பு சுவர் இன்றி தரைமட்டமாக ஏற்படுத்தி இருந்ததாலும், பொதுப்பாதையை ஆக்கிரமித்து ஏற்படுத்தப்பட்டுள்ளதாலும், மனுதாரரும், மற்ற நபர்களும் மேற்படி கிணற்றினை மூடும்படி 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதியிடம் கூறி வந்தனர். ஆனால், 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி பொதுப்பாதையில் அமைத்துள்ள கிணற்றினை மூட முன்வரவில்லை. இதனால் மேற்படி பொதுப் பாதையில் செல்லும் ஆட்கள், கால்நடைகள் கிணற்றில் தவறி விழுந்து உயிர் இழக்கக்கூடிய அபாயமும், வண்டி, வாகனங்கள் கிணற்றில் விழும் அபாயமும் இருந்து வந்தது. இதனால், 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதிக்கு மனுதாரரர் மீதும் மற்ற நபர்கள் மீதும் விரோதம் ஏற்பட்டது. மனுதாரருக்கு உரிமைப்பட்ட சொத்திற்கு தாவா பொதுப் பாதையின் வழியாக ஆட்கள், கால்நடைகள், வண்டி, வாகனங்களை எடுத்துச் சென்று விவசாயம் செய்து அனுபவித்து வருகிறார். மனுதாரர் தன் நிலங்களை அடைவதற்கு தாவாப் பொதுப் பாதையை தவிர வேறு பாதை அமைப்பு எதுவும் இல்லை. இந்நிலையில், கடந்த 30.09.2023-ம் நாள் 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதியின் நிலத்தில் வழியாக பிராது வரைபடத்தில் A,B,C,D என்று குறிப்பிடப்பட்ட பொதுப் பாதை பகுதியானது, 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதிக்கு மட்டுமே தனித்து உரிமைப்பட்டது என்றும், அதன் வழியாக மனுதாரர் வண்டி வாகனங்கள் எடுத்துச் செல்லக் கூடாது என்று 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி தடுத்தார். எனவே, மனுதாரர் வருவாய்துறை ஆவணங்களை சரிபார்த்ததில், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் பெயருக்கு பட்டா எண். 568 வழங்கப்பட்டுள்ளது மனுதாரருக்கு தெரிய வந்து சர்வே எண். 128/1 மற்றும் சர்வே எண்.128/-ல் உள்ள பொதுப்பாதையை தனியாக உட்பிரிவு செய்து பொதுப்பாதையில் உரிமையுடைய நபர்கள் பெயரில் கூட்டுப்பட்டா வழங்கும்படி இவ்வழக்கு 5ம் பிரதிவாதியாகிய பழனி கோட்டாட்சியரிடம் மனுத் தாக்கல் செய்திருந்தார். ஆனால், பழனி வருவாய் கோட்டாட்சியர் அந்த மனுவை பரிசீலனை செய்யாமலும், பொதுப்பாதையை உட்பிரிவு செய்து தனியாக பட்டா ஏற்படுத்தாமலும் இருந்து வந்தார். மேற்படி 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி பொதுப் பாதையில்

அமைத்துள்ள சுற்றுச்சுவர் அமைக்கப்படாத கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்கக்கோரி 2,3 எதிர்மனுதார்கள்/2,3 பிரதிவாதிகளிடம் விண்ணப்பம் செய்து இருந்தார். மனுதாரரும் மற்ற நபர்களும் ஆட்சேபணை செய்ததின்பேரில் பொதுப்பாதையில் 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி அமைத்துள்ள கிணற்றிற்கு 2,3 பிரதிவாதிகள் மின் இணைப்பு வழங்க மறுத்து விட்டார்கள். இதனால், 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி அவருக்கு உரிமைப்பட்ட நிலத்தில் மையப்பகுதியில் ஒரு ஆழ்துளை கிணறு அமைத்து, அதற்கு மின் இணைப்பு வழங்க கோரி 2,3 எதிர்மனுதார்/2,3 பிரதிவாதிகளிடம் தட்கல் திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்து, அதன் அடிப்படையில் பொதுப்பாதையில் மின்கம்பம் அமைக்க போவதாக 2,3 எதிர்மனுதார்கள்/ 2, 3 பிரதிவாதிகளின் ஆட்கள் வழக்குச் சொத்திற்கு மின் கம்பத்துடன் வந்த பின்னர்தான் 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி ஆழ்துளை கிணற்றிற்கு 2.3 பிரதிவாதிகளிடம் மின் இணைப்பு பெற ஏற்பாடுகள் செய்துள்ள விபரம் மனுதாரருக்கு தெரிய வந்தது. மேற்படி 2,3 எதிர்மனுதார்கள்/2,3 பிரதிவாதிகள் பிராது வரைபடத்தில் A,B,C,D என்ற பகுதியின்வழியாக மின் கம்பங்கள் ஊன்றி. 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதியின் ஆழ்துளை கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்கினால், மனுதாரர் பிராது வரைபடத்தில் A,B,C,D என்ற பொதுப்பாதையின் வழியாக வண்டி, வாகனங்கள் கொண்டு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடும். எனவே மனுதாரர் 05.10.2023-ம் நாள் 3ம் பிரதிவாதிக்கு ஆட்சேபணையை அனுப்பினார். அதன் பிறகும் 2,3 எதிர்மனுதார்கள்/2,3 பிரதிவாதிகள் பிராது வரைபடத்தில் A,B,C,D என்ற பகுதியின் வழியாக மின் கம்பம் அமைக்கப்போவதாக கூறி வருகிறார்கள். அவ்விதம் 2,3 பிரதிவாதிகள் பொதுப் பாதையில் மின் கம்பம் அமைத்துவிட்டால் மனுதாரர் தனது நிலங்களுக்கு வண்டி, வாகனங்கள் கொண்டு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடும். 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி பணபலமும், ஆட்கள் பலமும், அரசியல் செல்வாக்கும் மிக்கவர்கள். 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதியின் சட்டவிரோதச் செயலை நீதிமன்ற உத்திரவின் மூலம் மட்டுமே தடுத்து நிறுத்த முடியும். இல்லையெனில் மனுதாரருக்கு பணத்தால் ஈடு

செய்ய முடியாத இழப்பும், உரிமை தீங்கும் ஏற்படும். இதனால் எதிர்மனுதார்கள்/1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது. மேற்படி வழக்கில் முதல்நிலை வழக்கும் மனுதாரர் தரப்பிலேயே உள்ளது. வழக்கின் தன்மையும், சமநிலை வாய்ப்பும் மனுதாரர் தரப்பிலேயே உள்ளது. எனவே மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.**1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் உரையின் சுருக்கம்** :

1ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவார். மனுதாரர்/வாதியின் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யும், பிரட்டும், மோசடியுமானவை. 1ம் எதிர்மனுதாரரின் தனிப்பட்ட சொத்து என்பது பழனி வட்டம், பாப்பம்பட்டி கிராமம், சர்வே எண். 128/1-ல் அமைந்துள்ளது. 1ம் எதிர்மனுதாரரின் சிறிய மாமியார் திருமதி. குமாராத்தாள் அவர்களுடைய சொத்து மேற்படி கிராமம், சர்வே எண். 128/2-ல் அமைந்துள்ளது. மேற்படி சொத்துக்களுக்கு கீழ்புறமும், வடபுறமும் சர்வே எண். 127-ல் குதிரையாறு அமைந்துள்ளது. 1ம் எதிர்மனுதாரரின் சொத்திற்கு தெற்குபக்கம் சர்வே எண். 132-ல் அவரது மாமியார் திருமதி. மாராத்தாள் சொத்தும், சர்வே எண். 133-ல் அவரது மாமனார் திரு.குப்பண கவுண்டர் மற்றும் அவரது கணவர் திரு.ராமசாமி மற்றும் வாதி திரு.செல்லமுத்து ஆகியோருக்குப் பாத்தியப்பட்ட சொத்தும் அமைந்துள்ளது. மேலும், சர்வே எண்கள் 130, 131, 134, 135 ஆகியவற்றிலும் 1ம் எதிர்மனுதாரரின் கணவர் திரு.ராமசாமி மற்றும் அவரது அண்ணன் ஆகிய வாதி திரு.செல்லமுத்து ஆகியோருக்கு தனித்தனியே பாத்தியப்பட்ட சொத்துக்களும் அமைந்துள்ளது. அனைத்து சொத்துக்களுமே ஒரே முன் உரிமையாளருக்கு பாத்தியப்பட்டிருந்தவை ஆகும். 1ம் எதிர்மனுதாரரின் மாமனார், மாமியார், சிறிய மாமியார் முன்பே இறந்துவிட்டார்கள். அவர்களது சொத்துக்களை பாகம் பிரித்துக் கொள்வதற்கும், அனுபவிப்பதற்கும் 1ம் எதிர்மனுதாரரின் குடும்பத்திற்கும், வாதி குடும்பத்திற்கும் கருத்து ஒற்றுமை ஏற்படாமல் பயிர் செய்யப்படாமல் தரிசுகளாக இருந்து வருகின்றன.

மேற்படி விரோதம் காரணமாக வாதி சர்வே எண். 128/1-ல் உள்ள 1ம் எதிர்மனுதாரரின் சொத்துக்களை அவர் அனுபவிப்பதைப் பொறுத்து தாவா செய்ததால் அவர் மீது சமூகம் நீதிமன்றத்தில் O.S.No.403/1999 வழக்குத் தாக்கல் செய்து தீர்ப்பாணையும் பெற்றுள்ளார். மேற்படி தீர்ப்பாணையிலேயே மனுதார்/வாதி குறிப்பிடும் தாவாப் பாதையாகிய A,B,C,D பாதை குறிப்பிடப்பட்டும் உள்ளது. மேற்படி பாதையானது அனைவருக்கும் புழக்க உரிமையின் அடிப்படையில் ஆனதாகும். சர்வே எண்.128/2 அடி நிலம் மற்றும் சர்வே எண். 128/1-ன் அடிநிலம் அந்தந்த கிரையதாரர்களுக்கே பாத்தியப்பட்டதாகும். அதன்படி சர்வே எண்.128/1 -ன் அடிநிலம் 1ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டும், அவரது பெயருக்கு பட்டா பதிவு ஏற்பட்டும் அனுபவித்து வரப்படுகிறது. ஆனால் மனுதார்/வாதி குறிப்பிடுவதுபோல தாவா A,B,C,D பகுதியில் தன் நிலங்களுக்கு வண்டி, வாகனம், ஆடு, மாடு, ஆள் வகையறா போகவர பயன்படுத்துவதை தான் ஒருபோதும் இடைஞ்சல் செய்யவோ, ஆட்சேபிக்கவோ இல்லை. மேற்படி பாதைக்கு உரிமைப்பட்ட 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது கணவர் ராமசாமி ஆகியோரின் மேற்குறிப்பிட்டுள்ள பாதை உரிமைகளுக்கு உட்பட்டு அவர்களுடைய மேற்படி பாதை உரிமைகளுக்கு இடைஞ்சல் செய்யாமல் மலுதார்/ வாதியும் மேற்படி பாதையை பயன்படுத்திக் கொள்ள 1ம் எதிர்மனுதாரருக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை. ஆனால் மனுதார்/வாதி வேண்டுமென்றே ஏதாவது ஒரு உறுத்துக் கட்டளை உத்திரவினைப் பெற்றுக் கொண்டு, 1ம் எதிர்மனுதாரரின் பாத்தியத்திற்கு இடைஞ்சல் செய்ய திட்டமிட்டு இந்த பொய்யான வழக்கினையும், மனுவையும் தாக்கல் செய்துள்ளார். மேலும், இதே பாதை தொடர்பாக ஏற்கனவே 1ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் O.S.No.403/1999-ல் தீர்ப்பாணை பெற்றிருப்பதையும் தற்போது அவரது கணவர் திரு. ராமசாமி சமூகம் நீதிமன்றத்தில் O.S.No.161/2021-ல் மனுதாரர், அவரது மனைவி மற்றும் மகன்கள் ஆகியோர் மீது அவரது சொத்துக்கள் மற்றும் இதே தாவாப் பாதை தொடர்பாக தாக்கல் செய்த வழக்கு விசாரணையில் இருப்பதையும் மறைத்து குயுக்தியாக இந்த வழக்கினையும், இம்மனுவினையும் தாக்கல் செய்துள்ளார். எனவே, இந்த வழக்கு

மற்றும் மனுவே தேவையற்றதும், பலனற்றதும் ஆகும். எனவே இந்த வழக்கு மற்றும் மனு ஆகியவைகள் சி.பி.சி. பிரிவு 11-ன்படி தடை செய்யப்பட்டுள்ளது. மனுதார்/வாதிக்கு இம்மனுவைத் தாக்கல் செய்ய முதல்நிலை வழக்கும், சம நிலை வாய்ப்பும் இல்லை. எனவே மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர் உரையை 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொள்வதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

5 இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர் இம்மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

6. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

7. **தீர்வு**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். பிராது மாதிரி வரைபடத்தில் ABCD எனக் குறிப்பிடப்பட்டுள்ள வாகன வழிப்பாதை, வாதி, 1ம் பிரதிவாதிக்கு உரிமைப்பட்ட பொது வாகன வழிப்பாதை என்று விளம்புகை செய்யக்கோரியும், அதன் தொடர்ச்சியாக மேற்படி பாதையின் வழியாக மனுதாரர் தனது நிலங்களுக்கு வண்டி, வாகனம், ஆடு, மாடுகள் எடுத்துச் சென்று அனுபவித்து வருவதை 1ம் பிரதிவாதியோ, அவரது வகை ஆட்களோ எவ்வித தடையோ, இடைஞ்சலோ செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். மேலும் புல எண். 128/1 மற்றும் 128/2 ஆகியவற்றில் அமைந்துள்ள பொதுப்பாதையில் 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் மின்கம்பங்கள்

அமைத்து 1ம் எதிர்மனுதாரரின் ஆழ்துளை கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்கக்கூடாது என்றும் அசல் வழக்கில் அவர் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளார். மேலும் பிராது தபசிலில் தாவா விவரம் என்று குறிப்பிட்டு வாதி தனது நிலங்களுக்கு சர்வே எண்.128/1, 128/2 நிலங்களில் வடகோட்டில் கிழமேலாகவும், அதனைத் தொடர்ந்து தென்வடலாகவும் செல்லும் பொதுப்பாதையில் வண்டி, வாகனங்கள், கால்நடைகள், ஆட்கள் கொண்டு செல்வதை பிராது மாதிரி வரைபடத்தில் ABCD என குறிப்பிட்டுள்ள பகுதியில் 1ம் பிரதிவாதி தடையும், இடைஞ்சலும் செய்து வருவதே இந்த வழக்கிற்கான தாவா என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

8. இத்தகைய சூழ்நிலையில் தாவா பாதை பொதுப்பாதை என்பதைப் பொறுத்து எதிர்மனுதாரர்கள் தரப்பிலும் மறுக்கப்படவில்லை. மாறாக மேற்படி பாதையை மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் உட்பட அதன் கூட்டுரிமையாளர்கள் அனைவரும் பொதுப்பாதையாக பயன்படுத்தி வருவதாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறப்படுகிறது. மேலும் இதுபற்றி 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர் உரையில் மேற்படி பாதையை மனுதாரர் அனுபவித்து வருவதற்கு தான் ஒருபோதும் இடைஞ்சலோ, ஆட்சேபணையோ செய்யவில்லை என்றும், மேற்படி பாதையில் உரிமையுள்ள 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது கணவர் ராமசாமி ஆகியோரது பாதை உரிமைகளுக்கு உட்பட்டு அவர்களுடைய பாதை உரிமைக்கு இடைஞ்சல் செய்யாமல் மனுதாரரும் அந்த பாதையை பயன்படுத்திக் கொள்ள தங்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றும் கூறியுள்ளார். எனவே தாவா பாதையை கூட்டு உரிமையாளர் என்ற முறையில் மனுதாரர் புழங்கிக்கொள்வதில் தங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று எதிர்மனுதாரர்கள் அறுதியாக குறிப்பிட்டிருப்பது தெளிவாகிறது.

9. இத்தகைய சூழ்நிலையில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் 1ம் எதிர்மனுதாரர் தன்னுடைய சொத்தில் ஆழ்துளை கிணறு அமைத்து அதற்கு மின் இணைப்பு பெற விண்ணப்பித்துள்ளார் என்றும், அதற்காக தாவா பாதை வழியாக மின் கம்பங்கள் அமைத்து அதன் வழியாக 1ம் எதிர்மனுதாரரின் ஆழ்துளை கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்க 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் நடவடிக்கை எடுத்து வந்தார்கள் என்றும், ஆனால் அதற்கு மனுதாரர் ஆட்சேபணை செய்து அதனை தடுத்து நிறுத்திவிட்டார் என்றும், 1ம் எதிர்மனுதாரரின் ஆழ்துளை கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்கப்படுவதை தடுப்பதற்காகவே மனுதாரர் அசல் வழக்கினை தாக்கல் செய்து இந்த மனுவினையும் தாக்கல் செய்துள்ளார் என்றும், அவ்வாறு தாவா பாதை வழியாக மின் கம்பங்கள் அமைத்து 1ம் எதிர்மனுதாரரின் ஆழ்துளை கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்கப்படுவதை தடுப்பதற்கு மனுதாரருக்கு உரிமையில்லை என்றும், எனவே மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று வாதிட்டார். 1ம் எதிர்மனுதாரர் தரப்பு மேற்படி வாதத்திற்கு பதில் அளிக்கும் வகையில் மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் தாவா பாதை பொதுப்பாதை என்பதால் அதன் வழியாக மின் கம்பங்கள் அமைத்து 1ம் எதிர்மனுதாரரின் ஆழ்துளை கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்கக்கூடாது என்றும், ஆனால் தாவா பாதையை மனுதாரர் பயன்படுத்துவதற்கு இடையூறாக 1ம் எதிர்மனுதாரர் இவ்வாறு அதில் மின்கம்பங்கள் அமைத்து மின் இணைப்பு பெற நடவடிக்கை எடுத்து வருகிறார் என்றும், எனவே மனுதாரர் கோரும் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றும் வாதிட்டார். தாவா பாதை வழியாக மின் கம்பங்கள் அமைத்து அதன் வழியாக 1ம் எதிர்மனுதாரரின் ஆழ்துளை கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்குவதற்கு மனுதாரர் ஆட்சேபணை செய்வதால் அது சம்மந்தமாக நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவிற்கு கட்டுப்பட்டு 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் நடந்து கொள்வதாக கற்றறிந்த அரசு வழக்கறிஞர் தெரிவித்தார்.

10. இருதரப்பு வாதங்களை பரிசீலனை செய்கையில் 1ம் எதிர்மனுதாரர் தனக்குப் பாத்தியப்பட்ட சொத்தில் அமைத்துள்ள ஆழ்துளை கிணற்றிற்கு மின் இணைப்பு கோரி 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்களிடம் மனு செய்து அதற்காக தாவா பாதை வழியாக மின் கம்பம் அமைத்து மேற்படி ஆழ்துளை கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை மனுதாரர் தடுத்து வருவதே தரப்பினர்களுக்கிடையேயான தற்போதைய உண்மையான பிரச்சனை என்பது புலனாகிறது. தாவா பாதை பொதுப்பாதை என்பதால் அதன் வழியாக மின்கம்பம் அமைத்து 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான நிலத்தில் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்குவதற்கு மனுதாரர் தரப்பில் கடுமையாக ஆட்சேபணை செய்யப்படுகிறது. ஆனால் 1ம் எதிர்மனுதாரர் சொத்தில் உள்ள பயிர்கள் தண்ணீர் இன்றி வாடுவதாகவும், அதற்கான கிணற்றுப்பாசன அமைப்புகளுக்கு மனுதாரர் இடையூறு செய்து தடுத்து வருவதால் வேறு வழியின்றி பயிர்களை காப்பாற்றுவதற்காக 1ம் எதிர்மனுதாரர் தன்னுடைய சொந்த நிலத்தில் ஆழ்துளை கிணறு அமைத்து அதன் மூலமாவது தனது பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சி அவற்றை காப்பாற்றும் முகமாக மின் இணைப்பு பெற 1ம் எதிர்மனுதாரர் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கும் மனுதாரர் இடையூறு செய்து அதனை தடுத்து வருவதாகவும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கூறப்படுகிறது. மனுதாரர் அவ்வாறு ஆட்சேபணை செய்வதாலேயே 1ம் எதிர்மனுதாரர் அமைத்துள்ள ஆழ்துளை கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்க முடியவில்லை என்று 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பிலும் கூறப்படுகிறது.

11. ஆனால் தாவா பாதை வழியாக மின் கம்பம் அமைத்து 1ம் பிரதிவாதியின் ஆழ்துளை கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்குவதால் தாவா பாதையில் மனுதாரரின் கூட்டு அனுபவத்திற்கு என்ன இடையூறு ஏற்படும் என்பது பற்றி மனுதாரர் தரப்பில் விளக்கப்படவில்லை. மனுதாரருடன் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது கணவர் ஆகியோரும் சேர்ந்து தாவா பாதையை கூட்டாக அனுபவம்

செய்வதற்கு உரிமை உள்ளவர்கள் என்ற நிலையில் தாவா பாதையின் கூட்டு அனுபவத்திற்கு இடையூறு ஏற்படாமல் அதனை கூட்டாக அனுபவம் செய்து வருவதற்கு கூட்டுரிமையாளர்கள் அனைவருக்கும் உரிமை உள்ளது. எனவே கூட்டுரிமையாளர் என்ற முறையில் தாவா பாதை வழியாக மின் கம்பம் அமைத்து தனது சொத்தில் அமைத்துள்ள ஆழ்துளை கிணற்றிற்கு மின் இணைப்பு பெறும் உரிமை 1ம் எதிர்மனுதாரருக்கு உள்ளது. அதை தடுப்பதற்கு மனுதாரருக்கோ அல்லது இதர கூட்டுரிமையாளர்களுக்கோ எவ்வித உரிமையும் கிடையாது. ஆனால் 1ம் எதிர்மனுதாரர் அவ்வாறு தன்னுடைய ஆழ்துளை கிணற்றிற்கு மின் இணைப்பு பெறுவதை தடுக்கும்விதத்திலேயே மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். பொதுவாக ஒரு சொத்திற்கு மின் இணைப்பு வழங்குவதற்காக உரிய நடைமுறைகளை பின்பற்றி மூன்றாம் நபர்களுடைய சொத்தில் கூட மின் கம்பங்கள் அமைத்து மின் இணைப்பு வழங்க வழிவகை உள்ளது. அவ்வாறிருக்கையில் இந்த வழக்கில் தரப்பினர்களுக்கு கூட்டாக பாத்தியப்பட்ட பொதுப்பாதையின் வழியாக மின்கம்பங்கள் அமைத்து 1ம் எதிர்மனுதாரருக்கு மின் இணைப்பு வழங்குவதை ஆட்சேபணை செய்ய மனுதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை. அவ்வாறு மனுதாரர் தெரிவிக்கும் ஆட்சேபணையை 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் பரிசீலனை செய்ய வேண்டிய அவசியமும் இல்லை. ஆனால் இந்த வழக்கில் மனுதாரர் அவ்வாறு தாவா பாதையின் வழியாக மின் கம்பம் அமைத்து 1ம் எதிர்மனுதாரரின் ஆழ்துளை கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்குவதற்கு ஆட்சேபணை செய்து 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்களை தடுத்துவிட்டு அதனை மறைத்து தாவா பாதையில் அவரது அனுபவத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் இடையூறு செய்வதாக கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறப்படுவதுபோல மனுதாரர் சுத்தமான கரங்களுடன் இந்த நீதிமன்றத்தை அணுகவில்லை என்பது தெளிவாகிறது.

12. மேலும் மனுதாரரும், 1ம் எதிர்மனுதாரரும் நெருங்கிய உறவினர் என்பதும், 1ம் எதிர்மனுதாரரின் கணவர், மனுதாரரின் சகோதரர் என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஏற்கனவே கூறப்பட்டுள்ளதுபோல தாவா பாதையை மனுதாரர் அனுபவித்து வருவதற்கு தான் ஒருபோதும் ஆட்சேபணை செய்யவில்லை என்றும், மேற்படி பாதையில் உரிமையுள்ள 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது கணவர் ராமசாமி ஆகியோரது பாதை உரிமைகளுக்கு உட்பட்டு அவர்களுடைய பாதை உரிமைக்கு இடைஞ்சல் செய்யாமல் மனுதாரரும் அந்த பாதையை பயன்படுத்திக் கொள்ள தங்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றும் 1ம் எதிர்மனுதாரர் தன்னுடைய எதிர் உரையில் தெளிவாக கூறியுள்ளார். எனவே இவ்வாறான சூழ்நிலையில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்ய எவ்வித முகாந்திரமும் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. எனவே மேற்கண்ட காரணங்களினால் இந்த மனுவில் முதலேற்பு நிலை வழக்கோ, சமநிலை வாய்ப்போ மனுதாரருக்கு ஆதரவாக இல்லை என்பதாலும், மேலும் மனுதாரர் சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்பதாலும் மனுதாரர் கோரும் தகைமை நெறி பரிகாரமான இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்து உத்திரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14. முடிவில் இம்மனுவை எதிர்மனுதாரர்களின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2024 ம் ஆண்டு மார்ச் மார்ச் 26 ம் நாள் ஆகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2024.03.29 13:10:54 +0530

முதன்மை சார்பு நீதிபதி

பழனி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை.**

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>** - இல்லை.

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2024.03.29 13:10:59 +0530

முதன்மை சார்பு நீதிபதி,

பழனி

Principal Sub Court,
Palani.
I.A.No.2/2023
in
O.S.No.293/2023
<u>Fair/Draft Order</u>
Dated : 26.03.2024.